# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| | | |
|---|---|---|
| 25 பெப்ரவரி 2018 | தவக்காலம் இரண்டாம் ஞாயிறு | இரண்டாம் ஆண்டு |




அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## உங்கள் சிந்தனைக்கு

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறாகிய இன்று, நம் தாய்த் திரு அவை இயேசுவின் உருமாற்றத்தைப் பற்றிச் சிந்திக்க நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசுவோடு மூன்று ஆண்டுகள் வாழ்ந்த சீடர்களில் மூவருக்கு மட்டுமே கிடைத்த ஒரு வியப்புக்குரிய அரிய அனுபவம் இந்த உருமாற்றம்.

இயேசுவின் மானிடத் தன்மை மறைந்து, அவரது இறைத் தன்மை, இறை மாட்சியை வெளிப்படுத்தப்பட்ட விவரிக்க முடியாத ஓர் அனுபவத்தை இந்த மூவரும் உயர்ந்த மலை மேலே கண்டனர். அத்தோடு, இயேசு இறைத் தந்தையின் அன்பார்ந்த மகன். அவருக்கு செவிமடுப்பது இறைவனுக்கே செவிமடுப்பதாகும் என்னும் இறைவனின் குரலையும் கேட்கும் பேறு பெற்றனர்.

இந்த உருமாற்றம் உடனடியாக இல்லாவிட்டாலும், இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் அவர்களின் இறை நம்பிக்கையை ஆழப்படுத்த உதவியது. இயேசு இறைமகனாய், மாட்சி நிறைந்தவராய் இருந்தும்கூட, இறைத் திருவுளத்துக்குப் பணிந்து அனைத்தையும் துறந்து, எளிய மானிடராய் வாழ்ந்தார் என்னும் உண்மையை இந்தச் சீடர்கள் எத்தனையோ நாள்கள் எண்ணி, எண்ணி வியந்திருப்பர். தமது பணியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பர்.

இந்த உருமாற்ற நிகழ்விலிருந்து நாம் பல பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

1. நாம் இறைவேண்டலின் வழியாக, இறைவனோடு நெருக்கமான உறவு கொள்வதன் வழியாக அவருடைய மாட்சியில் பங்கு பெறலாம். அவரது சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.
2. தந்தைக்குப் பணிந்து வாழ்வதன் மூலமே அவருடைய ஒப்பிசைவைப் பெறமுடியும் என்பதையும் நாம் அனைவரும் உணர வேண்டும்.
3. துன்பங்கள், தோல்விகள் நிரந்தரமல்ல. அவை வெற்றிக்கான படிக்கட்டுகள். எனவே, துணிவுடன் அவற்றை எதிர்கொள்ளலாம் என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

இத்தவக்காலத்தில் இந்த சிந்தனைகளை நம் சிந்தையில் கொள்வோம். நாமும் இன்று இயேசுவின் இந்த வியப்புக்குரிய எளிமையை, கீழ்ப்படிதலை, பணிவை எண்ணி வியப்போம். நம்மால் இயன்ற வரை நமது விருப்பங்களை, ஆசைகளை விட்டுக்கொடுத்து, எளிமை, பணிவு, இழத்தல் என்னும் இறையாட்சி விழுமியங்களோடு வாழ முயல்வோம். வாழ்த்துக்கள்.

## மறையுரைத் தொடர்: இயேசு யார்?

நமது பங்குத் தந்தையர் மூவரும் "**இயேசு யார்?**" என்ற தலைப்பில் தொடங்கிய மறையுரைத் தொடரின் அடுத்த அமர்வு 01-03-2018 (வியாழன்), இரவு 7:45 மணிக்கு நடைபெறும்.
ஆங்கிலத்தில் புகழ் ஆராதனை, மறையுரை, செப வழிபாடு கொண்ட இந்நிகழ்ச்சியில் கலந்து, பயனடைந்து, உங்கள் ஆன்மீக வாழ்வு செழிப்படைய அன்புடன் அழைக்கிறோம்.

## தமிழில் சிலுவைப்பாதை

இத்தவக்கால வெள்ளிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு தமிழில் சிலுவைப்பாதையும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். உங்கள் தவக்கால அனுபவம் சிறப்படைய அன்புடன் அழைக்கிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்

சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு

18-03-2018, ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை (பல்நோக்குச் சமூகக் கூடம்)
முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி, முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு,
கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.
தொடர்பு: திரு. ரெக்ஸ் (9822-6171)



## நற்கருணை ஆராதனை & ஒப்புரவு வழிபாடு



04-03-2018, ஞாயிறு, மாலை 5:00 மணி
சிறப்பு ஒப்புரவு வழிபாடு (பாவசங்கீர்த்தனம்) நடைபெறும்.
இத்தவக்காலத்தில் நம் ஆன்மீக வாழ்வைச் செழிப்பாக்கி,
நம் ஆண்டவராகிய இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவை சிறப்புடன் கொண்ட,
நம் பாவங்களை அறிக்கையிட்டு, நம்மைத் தகுந்த முறையில் தயாரிக்க
இந்த வழிபாட்டுக்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

10-03-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

## தமிழ் வாசகர்கள் தேவை

நமது தமிழ் திருப்பலிகளில் வாசகம் வாசிக்கவும், தவக்கால வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை வாசிக்கவும் ஆர்வமுள்ள சிறுவர், சிறுமியர், இளையோர், பெரியோர் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். நீங்கள் உங்கள் பெயர்களைத் திருப்பலி முடிந்தவுடன் எங்களிடம் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ர | ல | தி | அ | க் | க | அ | ரு | ச |
| கு | பொ | ரு | த் | த | னை | க | ளை | தீ | தை |
| ற் | து | ன் | தி | ய | வா | தா | தா | கா | உ |
| கி | பே | ப் | பை | ட | யோ | க | பு | பி | யி |
| க் | து | ள் | க | தை | ட | ன | தா | சா | ர் |
| ழு | ரு | கு | க் | வு | த் | ல | நி | ல | வா |
| பை | வை | வே | ள் | கி | மா | ழு | ம் | டு | ழ் |
| கோ | க | ன | ப் | ர | ன | யா | மை | னி | வோ |
| க் | ட் | டு | ல | ள | வ | மை | ந் | த | ர் |
| யா | ரி | மோ | வ | கா | க | வ | ளி | ல் | ன் |

1. உன் ஒரே மகனான ஈசாக்குடன் __________ நிலப் பகுதிக்குச் செல்.
2. __________ மேல் கை வைக்காதே. அவனுக்கு எதுவும் செய்யாதே.
3. __________ நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.
4. ஆண்டவரே! உமக்கு என் __________ நிறைவேற்றுவேன்.
5. __________ தேர்ந்து கொண்டவர்களுக்கு எதிராய் யார் குற்றம் சாட்ட இயலும்?
6. இயேசு __________யும், __________யும், __________யும் அழைத்து ஓர் உயர்ந்த மலைக்குப் போனார்.
7. என் அன்பார்ந்த __________ இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | தொடக்க நூல் 22:1-2, 9-13, 15-18 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 116: 10,15, 16-17, 18-19 |
| பதிலுரை: உயிர் வாழ்வோர் நாட்டில்,<br>நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன். | |
| இரண்டாம் வாசகம்: | உரோமையர் 8 : 31b – 34 |
| நற்செய்தி வாழ்த்தொலி:<br>ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது:<br>‘என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்.’ | |
| நற்செய்தி வாசகம்: | மாற்கு 9 : 2 – 10 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.